**BANNER**
பனர் பிறிண்டிங்
35/-
Smart Digital Printing
இல. 255, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே - 0716501650

10/=

பக்கங்கள் 08

# எதிரொலி
Ethiroli

குரல் 01 அதிர்வு 34 வியாழக்கிழமை ஜூன் 08 2017 ethirolimedia@gmail.com 021 300 48 48

# ஐ.நா.தீர்மானத்தை நிராகரிக்க முடியாது

## சம்பந்தன் திட்டவட்டம்

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் தீர்மானங்களை பாராளுமன்றம் நிராகரிப்பதை எக்காரணம் கொண்டும் அனுமதிக்க முடியாது என எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவைக்கு இலங்கை அரசாங்கம் வாக்குறுதியளித்துள்ளது. எனவே நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை அமுல்படுத்த வேண்டிய கடப்பாடு அரசாங்கத்துக்கு உண்டு - என சுட்டிக்காட்டியுள்ள அவர் ஜெனீவா தீர்மானங்களை முழுஅளவில் துரிதகதியில் அமுல்படுத்த வேண்டுமென கோரியுள்ளார். அது இலங்கைக்கு எதிரான தீர்மானம் கிடையாது. யுத்தமொன்றின் போது மனிதாபிமான சட்ட 08



### விஞ்ஞானப் பட்டதாரிகளுக்கு

# சனிக்கிழமை நியமனங்கள்

வடக்கு மாகாணப் பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்க ளுக்குத் தெரிவு செய்யப்பட்ட விஞ்ஞா னப் பட்டதாரிகளுக்கான நியமனக் கடிதங்களை வழங்கும் நிகழ்வு நாளை மறுதினம் சனிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் நடைபெற வுள்ளது.

குறித்த ஆசிரிய வெற் றிடங்களுக்கு தேர்வான பட்டதாரிகள் நாளை முற்பகல் 9 மணிக்கு தவறாது யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் சபாலிங்கம் மண்டபத்தில் அறிக்கையிட்டு தங்களுக் குரிய நியமனக்கடிதங் களைப் பெற்றுக்கொள் ளுமாறு வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இரவீந்திரன் அறிவித்துள்ளார்.

அதேவேளை நியமனத்தைப் பெற்றுக் கொள்ள வரும் பெண் பட்டதாரிகள் இளவர் ணச் சேலையுடனும், ஆண் பட்டதாரிகள் கறுப்பு வர்ண நீளக் காற்சட்டை மற்றும் வெள்ளை நிற சேர்ட்டும் அணிந்து வரவேண்டு மெனவும் அவர் அறிவு றுத்தியுள்ளார். (அ)

### இன்று ஒரு நாளில் மட்டும்

# 7 பேர் பலி!

இன்று மதியம் வரை நாட்டின் பல பாகங்களி லும் இடம்பெற்ற விபத்துக்களில் 7 பேர் உயிரிழந்துள்ளனர்.

● இன்று அதிகாலை அனுராதபுரம், கவரக்குளம் வீதியில் மோட்டார் சைக்கிள் ஒன்று வாகனம் ஒன்று டன் மோதியது. இதில் மோட்டார் சைக்கிளை செலுத்திய பொலிஸார் ஒருவர் பலியானார்.

● கும்புக்கெடே பகுதி யில் மோட்டார் சைக்கிள் கள் இரண்டு ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக் குள்ளாகின. இதில் 72 வயதான முதியவர் பலியாகியுள்ளார்.

● கெஸ்பேவ 08

### திருமுருகன் காந்தியை விடுதலை செய்

# யாழில் போராட்டம்




தமிழக அரசினால் கைதுசெய்யப் பட்டு குண்டர் சட்டத்தின் கீழ் சிறையில் தடுத்து வைக்கப்பட்டு உள்ள ஈழத் தமிழ் ஆதரவாளர் திருமுருகன்காந்தியின் விடுதலையை வலியுறுத்தி யாழில் போராட்டம் நடைபெற்றுள்ளது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் குறித்த போராட்டம் யாழ். மத்திய பேருந்து நிலையம் முன்பாக இன்று காலை 10 மணியளவில் முன்னெடுக்கப்பட்டது. மே 17 இயக்க ஸ்தாபகரான திருமுருகன் காந்தி மே 17 ஆம் நாளன்று முள்ளிவாய்க்காலில் படுகொலைசெய்யப்பட்டவர்கள் நினைவாக மெரீனா கடற்கரையில் அஞ்சலி நிகழ்வினை மேற்கொண்டபோது கைது செய்யப்பட் டிருந்தார். (எ-01)

### கட்டார் நெருக்கடியால் இலங்கைக்கு

# பாதிப்பு

கட்டாருக்கு எதிராக எழுந்துள்ள நெருக்கடி யால் இலங்கையின் சுற் றுலாத்துறையில் பெரும் தாக்கம் ஏற்படும் என்று சுற்றுலாத்துறை அமைச் சர் ஜோன் அமரதுங்க ஒப்புக் கொண்டுள்ளார்.

"ஒரு லட்சத்து 40 ஆயிரம் இலங்கையர்கள் கட்டாரில் உள்ளனர். கடந்த 2 வருடங்களில் சவூதிக்கு அடுத்தபடி யாக அதிகமான இலங்கையர்கள் வேலை வாய்ப்புகளுக் காகக் கட் டாருக்கே சென்றுள்ள னர். எனினும் கட்டாரில் எழுந்துள்ள சிக்கலால் அங்குள்ள இலங்கைத் தொழிலாளர்கள் நாட் டுக்கு திரும்பும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனால், இலங்கையின் அந்நியச் செலாவணி வீழ்ச்சியைச் சந்திக்கும். அத்துடன் கட்டார் விமான சேவையால் கிடைத்த வருமானமும் குறையும் நிலை தோன் றியுள்ளது" - என்றார் அவர். (ஆ)

# இதற்குத்தான் ஆசைப்பட்டாயா?

"தனிநாட்டுக்காக போராடிய தமிழர்களால் ஒரு மாகாணசபையைக் கூட ஒழுங்காக நடத்த முடியவில்லையே. இதற் குத்தான் ஆசைப்பட் டாயா மனோகணேசா? என்று சிங்கள ஊடகவிய லாளர்கள் என்னிடம் கேட்கிறார்கள்" என்று தெரிவித்துள்ளார் அமைச்சர் மனோக ணேசன்.

"வடக்கு மாகாண சபையில் கூட்டமைப்பு கைப்பற்ற எனக்கும் பங்குண்டு. விக்னேஸ் வரனை முதலமைச்சர் வேட்பாளராக போட்டி யிட சம்மதிக்க வைத்தவர் களில் நானும் ஒருவன். அத்தோடு கிளிநொச்சி, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு 08

# இலங்கையில் மிகப்பெரிய மீன்பிடித்துறைமுகம் பருத்தித்துறையில்

## மக்களுடன் பேச்சுநடத்த யாழ்.வருகிறார் அமைச்சர்

இலங்கையின் மிகப்பெரிய மீன்பிடித் துறைமுகம் பருத்தித்துறையில் அமைக்கப்படவுள்ளது என்று இலங்கையின் கடற்றொழில் அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார். பருத்தித்துறை மீன்பிடித் துறைமுக அபிவிருத்திக்கு உள்ளூர் மக்கள் எதிர்ப்புத் தெரிவித்திருந்தாலும், நான் அங்கு சென்று அவர்களுடன் கலந்துரையாடவுள்ளேன். என்றும் அவர் தெரிவித்திருக்கிறார். இலங்கை நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய போது அவர், இதனைக் கூறினார்.

இந்த துறைமுகம் அமைக்க நிதியை வழங்குவதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி இணங்கியுள்ளது. 1983ஆம் ஆண்டுக்கு முன்னர் மொத்த உள்நாட்டு மீன் உற்பத்தியில் 40 சத வீதம் வடக்கில் இருந்தே பெறப்பட்டது. தற்போது, இது 12 வீதமாக உள்ளது. இது திருப்தியான நிலை அல்ல. தென்பகுதியுடன் ஒப்பிடும் 08

# 6 பிள்ளைகளின் தாய் தூக்கில் தொங்கி சாவு!

கடன் சுமை காரண மாக 6 பிள்ளைகளின் தாயார் ஒருவர் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளார். தொண் டமானாறு அக்கரைப் பகுதியில் இன்று காலை இந்தப் பரிதாபச் சாவு நிகழ்ந்துள்ளது.

இதே இடத்தைச் சேர்ந்த உதயசீலன் லலிதாராணி(வயது 51) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார். கடந்த சிலநாள்களாக அவர் கடன்சுமையால் மிகவும் நெருக்கடியான நிலையில் இருந்துள்ளார். இந்தநிலையில் இன்று காலை தனது கணவரைக் கடற்தொழிலுக்கு அனுப் பிவைத்துவிட்டு வீட் டுக்கு அருகே உள்ள மர மொன்றில் தூக்கு கயிற்றை மாட்டி தற்கொலை செய்துள்ளார். சம்பவம் குறித்து வல்வெட்டித் துறைப் பொலிஸார் விசார ணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (அ-11)

## கூரிய ஆயுதத்தால் தாக்கி ஒருவர் கொலை

பின்னவல - மொரஹெல பகுதியில் நேற்று இரவு கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார். தாக்குதலில் படுகாயமடைந்த அவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போதும், சிகிச்சை பலனின்றி பலியாகியுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (உ)

# அமைச்சு செயலர்கள் இன்று நியமனம்

சில அமைச்சுக்களுக்கு இன்று முதல் புதிய செயலாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இதற்கமைய, போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சின் செயலாளராக, ஜி.எஸ். விதானகேவும், தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சின் செயலாளராக ஜே.ஏ.ரஞ்சித்தும், அறிவியல் மற்றும் தொழிநுட்பத்துறை அமைச்சின் செயலாளராக சிராணி வீரக்கோனும் நியமிக்கப்பட்டுள்ளனர். (இ)

## போதை மாத்திரை இளைஞர் சிக்கினார்





திருகோணமலை, கிண்ணியாவில் தடை செய்யப்பட்ட போதை மாத்திரைகளுடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். 27 வயதுடைய குறித்த சந்தேகநபர் டெரம் டோல்-எக்ஸ் எனும் 126 போதை வில்லைகளையும், 5 கிராம் கேரளா கஞ்சாவையும் விற்பனைக்காக கொண்டு செல்லும் போதே இன்று கைது செய்யப்பட்டுள்ளார். (ஆ)

## மைத்திரி தலைமையில் பொசன் கொண்டாட்டம்

பொசன் பௌர்ணமி தினத்தை முன்னிட்டு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் பொலனறுவையில் பல்வேறு வைபவங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. பொசன் பௌர்ணமி தினமான இன்று தொடக்கம் எதிர்வரும் 10 ஆம் திகதி வரை இந்த வைபவங்கள் தொடர்ச்சியாக நடைபெறவுள்ளன. பொசன் வருடாந்த அன்னதானம் பொலனறுவை பராக்கிரம சமுத்திரத்தின் அருகில் இன்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது. முப்படையினர் மற்றும் சிவில் பாதுகாப்புப் படையினரின் பங்களிப்புடன் பொலனறுவை முழுவதும் 75 இடங்களில் வெசாக் தோரணைகள் மற்றும் வெளிச்சக் கூடுகள் அமைக்கப்பட்டுள்ளன. (ஆ)

## மகளை வன்புணர்ந்த விரிவுரையாளர் கைது

8 வயது மகளை தொடர்ச்சியாக பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தி வந்த பல்கலைக்கழக விரிவுரையாளர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.
பொரளையை சேர்ந்த 43 வயதான நபர் தனது மகளை நீண்டநாள்களாக பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தி வந்துள்ளார். இது குறித்து சிறுமி தாயாருக்கு தெரியப்படுத்தியதன் பேரில் அவர் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.
இதையடுத்து விரிவுரையாளர் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். (உ)

## 150 கிலோ கடல் அட்டைகளுடன் யாழில் இளைஞர் கைது!




150 கிலோ கடல் அட்டைகளை சட்டவிரோதமாக விற்க முயன்ற இளைஞர் ஒருவர் யாழ்.பண்ணைப் பகுதியில் பொலிஸாரினால் இன்று அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளார். நாச்சிக்குடா முழங்காவெளிப் பகுதியைச் சேர்ந்த குறித்த இளைஞர் இந்தக் கடல் அட்டைகளை தீவகத்தில் இருந்து நாச்சிக்குடாவுக்கு கொண்டு செல்ல முயன்றுள்ளார். எனினும் அவரை சந்தேகத்தின் பேரில் பொலிஸார் பண்ணைப் பகுதியில் வைத்துச் சோதனையிட்டனர். அப்போதே அவரிடம் இருந்து பல லட்சம் ரூபா பெறுமதியான 150 கிலோ கடல் அட்டைகள் பறிமுதல் செய்யப்பட்டதுடன் அந்த இளைஞரும் கைது செய்யப்பட்டார்.
கடல் வளச் சட்டத்தின் பிரகாரம் கடல் அட்டைகளைப் பிடிப்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஆ)

## சாவகச்சேரியில் சைக்கிள் களவு



சாவகச்சேரி பொதுச் சந்தையில் இன்று காலை 10 மணியளவில் சைக்கிள் ஒன்று திருடப்பட்டுள்ளது. சைக்கிள் உரிமையாளர் சைக்கிளை நிறுத்தி விட்டு திறப்பினை எடுக்க தவறியதை அவதானித்தவர்களே அதனைத் திருடிச் சென்றுள்ளனர். சந்தைக்குச் சென்றவர் பத்து நிமிடம் கழித்து சைக்கிளை நிறுத்திய இடத்தில் வந்து பார்த்த போதே அது திருடப்பட்டமை தெரியவந்துள்ளது. (அ)

## பஸ் நிலையத்தில் சண்டை: இருவர் வைத்தியசாலையில்




வவுனியா மத்திய பஸ் நிலையத்தில் இன்றுகாலை 10.15 மணியளவில் தனியார் பஸ' மற்றும் இ.போ.ச ஊழியர்களுக்கிடையே ஏற்பட்ட மோதலில் இருவர் காயமடைந்துள்ளனர்.
பயணிகளை ஏற்றுவதில் ஏற்பட்ட போட்டியே, குறித்த இரு தரப்பினருக்கும் இடையில் கைகலப்பாக மாறியது. இதனால் இ.போ.ச. ஊழியர் ஒருவரும், தனியார் பஸ் ஊழியர் ஒருவரும் காயமடைந்த நிலையில் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (அ)

## அனர்த்தங்களில் பலியானோருக்கு வடமராட்சியில் அஞ்சலி




தென்னிலங்கையில் இயற்கை அனர்த்தங்களால் உயிரிழந்த மக்களுக்கான ஆத்மசாந்தி நிகழ்வொன்று வடமராட்சியில் நேற்று இடம்பெற்றுள்ளது.
இமையாணன் மத்தி விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த அஞ்சலி நிகழ்வில் கிராமசேவகர், பொலிஸ் உத்தியோகத்தர்கள் விளையாட்டுக்கழக உறுப்பினர்கள் , பொது மக்கள் என ஏராளமானோர் கலந்துகொண்டு , அனர்த்தங்களால் உயிரிழந்தோருக்கு ஈகைச்சுடர் ஏற்றியும், மலர்மாலை சூட்டியும் அஞ்சலி செய்தனர்.
கொட்டும் மழைக்கு நடுவிலும் இந்த அஞ்சலி நிகழ்வு நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (அ-11)

## பதுளையில் டெங்கு



பதுளை - படல்கும்பரைப் பகுதியில் 40 பேர் டெங்குநோயால் பாதிக்கப்பட்டுள்ளனர் . இந்தத் தகவலை பதுளைப் பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் தெரிவித்தார்.
“இந்தப்பகுதியில் டெங்கு நுளம்புகளின் பெருக்கம் அதிகரித்துள்ளது. இதுவிடயத்தில் கூடிய அக்கறை செலுத்தி, டெங்குநுளம்புகளை அழிக்கும் வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன ” எனவும் அவர் கூறினார். (ஆ)


தமிழர் தாயகத்தின் முதல் மாலைத் தினசரி
எதிரொலி Ethiroli
ஊடக அனுசரணையில்
அரியாலை சரஸ்வதி சன சமூக நிலையத்தின்
98ஆவது ஆண்டு நிறைவையொட்டி
பெரு விளையாட்டு விழா-2017
10.06.2017 (சனி) - 11.06.2017 (ஞாயிறு) - காலை 9 மணி தொடக்கம்
கரப்பந்தாட்டம் (செற் அப்)
பங்கேற்கும் அணிகள் :
யாழ். ஆவரங்கால் இந்து இளைஞர் வி.க.
யாழ். ஆவரங்கால் மத்திய வி.க.
யாழ். புத்தூர் கலைமதி வி.க.
யாழ். இளவாலை மத்திய வி.க.
சிங்க றெஜிமன்ற் (இலங்கை இராணுவம்)
யாழ். இராணுவ பிரிவு (கொடிகாமம்)
கிளிநொச்சி மாவட்டம்
மன்னார் மாவட்டம்
(இறுதிப் போட்டி : 11.06.2017 இரவு 7 மணி)
விளையாட்டு விழாவைக் கண்டு களிக்க அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
ஏற்பாட்டாளர்கள்: சரஸ்வதி சன சமூக நிலையம், அரியாலை



## இலங்கை வர ரஜினிக்கு அழைப்பு

ரஜினி விரும்பினால் இலங்கை வரலாம் என இலங்கை வெளி விவகார அமைச்சர் ரவி கருணா நாயக்க அழைப்பு விடுத்தி ருக்கிறார். இந்தியா சென்றுள்ள அவர் அங்குள்ள ஊடகங் களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே இவ்வாறு குறிப் பிட்டிருக்கிறார். இந்தியாவில் மட்டு மல்ல இலங்கையி லும் ரஜினிகாந்த் பிரபலமானவரே என்று குறிப்பிட்ட அவர், இலங்கையில் ரஜினிக்கு அதிக ளவில் ரசிகர்கள் இருக்கிறார்கள். இலங்கை தரப்பில் அவருக்கு எதிராக எந்த எதிர்ப்பும் கிடையாது. ரஜினி ஆசைப்பட்டால் இலங்கை வரலாம் என்று கூறியிருக் கிறார். (உ)

## பிரிட்டனின் புதிய பிரதமர் தெரேசாவா? கோபனா?

# இன்று தேர்தல்



பெரும் எதிர்பார்ப்புக ளுக்கு மத்தியில் பிரிட்டன் பாராளுமன்றத்தேர்தல் இன்று நடைபெறுகிறது. இதில் தற்போதைய பிர தமர் தெரேசா மே தலை மையிலான கொன் சர்வேடிவ் கட்சிக்கான ஆதரவு சடுதியாகச் சரிந்துள்ளமையால் முடிவுகள் எப்படி அமை யும் என்று எவராலும் கணிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. பிரிட்டன் பாராளுமன்றத் தின் ஆயுட்காலம் 2020 ஆம் ஆண்டுவரை இருந்தது. ஆயினும் ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரிட்டன் விலகும் முடிவை எடுத்ததால் பலமான ஆட்சியொன்று தேவையென பிரதமர் தெரேசா மே பாராளு மன்றில் தெரிவித்தார். இதனையடுத்தே புதிய தேர்தலுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது. ஆரம் பத்தில் ஆளும் கொன்சர் வேட்டிவ் கட்சி பெரும் பன்மை இடங்களைப் பிடிக்கும் நிலை இருந்தது. ஆனால் அடுத்தடுத்து பிரிட்டனில் நடந்த தாக்கு தல்களால் அந்தக் கட்சி மீது மக்கள் அதிருப்தி அடைந் துள்ளனர். இதனால் கோபன் தலைமையிலான தொழிற் கட்சிக்கு ஆதரவு அதிக ரித்துள்ளது. ஈழத்தமிழர்கள் மீது ஆரம் பம் முதலே கோபன் கரிசனை கொண்டவர் என்பதும் குறிப்பிடத் தக்கது. (இ)




## மனிதனுக்கு வயது 3 லட்சம் வருடங்கள்

2 லட்சம் ஆண்டுகளுக்கு முன்பு மனித இனம் தோன்றியதாக கருதப் பட்டு வந்த நிலையில், தற்போது கிடைத்துள்ள ஆதிமனிதனின் மண்டை ஓடு ஆராய்ச்சியாளர் களின் கூற்றை பொய்யாக் கியுள்ளது. சமீபத்தில் கிழக்கு ஆபிரிக்காவில் ஆதிமனி தனுடையது எனக் கூறப்படும் மண்டை ஓடு களை ஆராட்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். அதனைச் சோதனை செய்த அவர்கள் அவை சுமார் 3 லட்சம் ஆண்டு கள், அதாவது ஆராய்ச்சி யாளர்கள் முன்பு குறிப் பிட்டிருந் ததை விட ஒரு லட்சம் ஆண்டுகளுக்கு முன்பே வாழ்ந்து வந்த ஆதி மனிதனுடையது என் பதை கண்டுபிடித்துள் ளனர். (உ)

## திரைப்படமாகிறது மன்மோகன்சிங் வரலாறு

முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங்கின் வாழ்க்கை வரலாறு திரைப்படமாக வெளியிடப்பட வுள்ளது. அவரது கதாபாத்திரத் தில் அனுபம் கெர் நடிக்க உள் ளார். 2006ஆம் ஆண்டு முதல் 2014ஆம் ஆண்டு வரை பத்தாண் டுகள் இந்திய பிரதமராக பதவி வகித்த மன்மோகன் சிங், பிரதம ராக தேர்வு செய்யப்பட்டது தொடர்பாக, அவரது ஊடக ஆலோசகரான சஞ்சய் பாரு எழுதிய புத்தகத்தின் அடிப் படையில் 'தி ஆக்சிடெண்டல் பிரைம் மினிஸ்டர் என்ற பெயரில் திரைப்படம் உருவாக உள்ளது. இப்படத்தில் இயக்குநர் அனுபம் கெர் மன்மோகன் சிங் வேடத்தில் நடிக்க இருக்கிறார். தனது டுவிட் டர் செய்தியில் இதை தெரிவித் துள்ள அனுபம் கெர், "தி ஆக்சி டெண்டல் பிரைம் மினிஸ்டர்" என்ற திரைப்படத்தில் மன்மோகன் சிங் வேடத்தில் நடிக்க ஆவலுடன் இருப்பதாக குறிப்பிட் டுள்ளார். (உ)




## 15 மீனவர்கள் விடுதலை!

ஈரான் சிறையிலிருந்த தமிழகத்தைச் சேர்ந்த 15 மீனவர்கள் விடுதலை யாகி, தமிழகம் திரும்பி யுள்ளனர்.ராமநாதபுரம் மாவட் டத்தைச் சேர்ந்த 15 மீனவர்கள், மீன்பிடித் தொழிலாளிக ளாக துபாய் சென்றனர். எல்லை தாண்டி மீன் பிடித்ததாகக் குற்றம் சாட்டப்பட்டு, 2016 டிசம்பர் 15 ஆம் திகதி, அவர்கள் ஈரான் கடற் படை அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்ட னர். இதையடுத்து, ஈரான் சிறையில் அடைக்கப்பட்டனர்.(உ)

## இந்திய ஜனாதிபதித் தேர்தல்

# ஜூலை 17

இந்திய ஜனாதிபதி தேர்தல் ஜூலை 17 ஆம் திகதி நடைபெறும் என்று இந்தியத் தலைமைத் தேர்தல் ஆணையாளர் நசீம் ஜைதி அறிவித்துள்ளார். "ஜனாதிபதி தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் ஜூன் 14 ஆம் திகதிமுதல் ஏற்றுக் கொள்ளப்படும். இந்த வேட்புமனுக்கள் மீதான பரிசீலனை 29ஆம் திகதி நடைபெறும். ஜூலை 17 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்குப்பதிவு நடைபெறும்.ஜூலை 20 ஆம் திகதி வாக்குகள் எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படும். அப்போது புதிய ஜனாதிபதி யார்? என்பது தெரிந்துவிடும்" என அவர் தெரிவித்துள் ளார். (இ)

## சீனப் படைத்தளம் பாகிஸ்தானில்

"சீனா நீண்ட காலமாக நட்புறவு வைத்துக்கொண்டுள்ள நாடுகளில் கூடுதல் படைத்தளங் களை அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றது. அந்த வகையில் பாகிஸ்தானில் வெகுவிரைவில் சீனா தனது படைத்தளங்களை அமைக்கவுள் ளது" என்று அமெரிக்காவின் இராணுவ அமைச்சகம் தெரிவித்துள்ளது. "உலகளாவிய அளவில் தனது நட்பு நாடுகளில் ஒன்றான ஜிபூட்டியில் சீனா தனது இராணுவத் தளத்தை கட்ட மைத்து வருகிறது. சீனாவின் படைபலத்தை விரிவாக்கம் செய்யும் நடவடிக்கையில் இது முதல் நடவடிக்கையாக அமைந்துள்ளது. இதனையடுத்தே அது பாகிஸ் தானிலும் கால்வைக்கவுள்ளது. சீனா, தற்போது பலுசிஸ்தானில் உள்ள குவாதர் துறை முகத்தை மேம்படுத்தி வருகிறது. அங்கு தனது இராணுவத்தை அமர்த்து வதே சீனாவின் நோக்கம் அவ் வாறு நடந்தால் அது இந்தியா வுக்கு பெரும் நெருக்கடியாக அமையும்" என்றும் அந்த அமைச்சகம் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது. (இ)

## பிலியந்தலை துப்பாக்கிச் சூடு

# இருவர் கைது

பிலியந்தலை பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவம் தொடர் பில் இருவர் கைதுசெய்யப் பட்டுள் ளனர். கடந்த 9ம் திகதி போதைப் பொருள் சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது இந்த துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப் பட்டமை குறிப்பிடத் தக்கது. இதில் பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பிரிவு அதிகாரி ஒருவர் மற்றும் சிறுமி ஒருவரும் உயிரிழந்தனர். பொலிஸ் அதிகாரிகள் இருவர் உள்ளிட்ட ஐவர் காயமடைந்தனர். இந்தநிலையில், குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய 34 மற்றும் 27 வயதான இருவர் அகுங்கல்ல - தர்கா நகரில் வைத்து கைதுசெய்யப்பட் டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். இவர்களை இன்று கெஸ்பேவ நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட டுள்ளது. (உ)

## நீருக்குள் பாய்ந்தவர் சடலமாக மீட்பு

மட்டக்களப்பு கல் லடிப் பாலத்தில் இருந்து நீருக்குள் குதித்த மாணவ னின் உடலம் இன்று மீட்கப்பட் டுள்ளது. மட்டக் களப்பு சிவானந்தா வித்தியாலய க.பொ. உயர்தர (கணித பிரிவு)வகுப்பு மாணவனான கரு ணாகரன் பவனு ஜன் (வயது17) என் பவரின் உடலமே இவ்வாறு மீட்கப் பட் டுள்ளது. நேற்று வழக்கம் போல பாட சாலைக்குப் புறப் பட்ட மாணவன் திடீரென கல்லடிப் பாலத்தில் தனது உடமைகளையும் சைக்கிளையும் வைத்து விட்டு நீருக்குள் பாய்ந்திருந்தார். அவரை மீட்க கடற்படையினரும் பொலிஸாரும் தீவிர முயற்சி எடுத்தும் அது பயனளிக்கவில்லை. இந்த நிலையில் இன்று காலை அவரது உடல் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது. தற்போது மாணவனின் சடலம் மட்டக்களப்பு போதனா வைத்திய சாலையில் வைக்கப் பட்டுள்ளது. (இ)



## ஒளிச்சுடர் கட்டடத் திறப்பு விழா



காரைநகர், சிவகாமியம்மன் கோவிலடி ஒளிச்சுடர் விளையாட்டுக்கழகத்தின் புதிய கட்டடத் திறப்புவிழா நேற்றுப் புதன்கிழமை காலை இடம்பெற்றது. இதில் வடமாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன் பிரதம விருந்தினராகவும், காரைநகர் பிரதேச செயலாளர் தயாரூபன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டனர்.



உ

தில்லையம்பதியான் துணை


## சீர்மேவு யாழ்ப்பாணம் கோண்டாவில்

# ஈழத்து தில்லையம்பதி ஸ்ரீசிவகாமி அம்பாள் திருக்கோயில்

# வசந்த வைகாசி மஹோற்சவ பெருவிழா-2017

## புதிய நவகோண சித்திரத் தேர் சிறப்பு மலர் - 08.06.2017





தமிழ் நாட்டிலிருந்து வருகைதந்த பூஜண்ட நாகநாத சித்தர் சுவாமிகள் (அதிஷ்டானம்) அவர்கள் வெள்ளோட்டத் திருவிழாவில் கலந்து கொண்டு ஆசியுரை வழங்கி சிறப்பித்தார்.



## திருக்கோயில் வரலாறு

அன்று சிவபூமி என்று திருமூலர் அழைத்த மணிநாடாம் இலங்கை மண்ணின் யாழ் மாவட்டத்தில் சைவப் பெருமக்கள் வாழும் நல்லூர் பிரதேசத்தில் கோயில்கள் அதிகமாக உள்ள இடமாகவும் நீர்வளம், நிலவளம், தானியங்களும், பயிர்களும் சிறப்புற விளைகின்ற இடமாகவும் ஈழத்துத் தில்லையம்பதி திகழ்கின்றது. இத்தகைய தில்லையம்பதியில் இற்றைக்கு 150 ஆண்டுகளுக்கு முன்னர் தோற்றம் பெற்ற பேச்சியம்மன் என அழைக்கப்பட்ட கோயில் ஆரம்பத்தில் வேலன் என்ற அன்பரால் மாமர நிழலில் வெள்ளைக் கல்லைவைத்து ஓலையால் வேயப்பட்ட சிறு கொட்டிலைமைத்து சாணகத்தால் மெழுகி தண்டவாள இரும்பின் மணியோசையுடனும் பிரதி செவ்வாய், வெள்ளி தோறும் திருவிளக்கு ஏற்றி வைத்து வழிபாடு செய்யப்பட்டு வந்தது. காலத்தின் பயனாக இவருடைய சிந்தனையின் நிமித்தம் பேசிய அம்மன் என்ற திருவுருவத்தினை கருங்கல்லால் அமைத்து நான்கு பக்கமும் கன்னாமதில் கற்களால் கட்டப்பட்டு கூரை தட்டினால் வேயப்பட்டு 15 அடி விஸ்தீரணம் கொண்ட மடாலயம் அமைத்து அம்பாள் பிரதிஷ்டை செய்யப்பட்டது. அம்பாளின் அபிஷேகத்திற்கு தேவையான நீரானது சரவண்ண என்ற அடியவரின் வீட்டுக் கிணற்றிலிருந்து எடுக்கப்பட்டு அபிஷேகம் செய்து வந்தனர். மேலும் அடியவர்களினால் கொழுக்கட்டையுடன் பிட் அரிசியினை காணிக்கையாக கொண்டு வெள்ளை அரிசிச் சாதம் தினந்தோறும் இரவு வேளையில் அம்பாளுக்கு நைவேத்தியமாக படைக்கப்பட்டது. 1910ம் ஆண்டு இக் கோயிலுக்கு குதிரை வாகனம் ஒன்று செய்யப்பட்டது. மேலும் கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்த சைவ ஆசாரத்தைப் பேணும் சுபாபதி மார்க்கண்டேயர் அவர்கள் பூசகராக நியமிக்கப்பட்டார். இவர் காலத்திலேயே ஆதி ஞான வைரவர் ஆலயத்தில் நடைபெறுகின்ற மானம்பூ திருவிழாவில் வாழைவெட்டுப் பூசைக்காக அம்பாள் கட்டுச் சுவாமியாக இரவு வேளையில் அலங்காரமாக எழுந்தருளுவது வழக்கமாகும். வைகாசி விசாகத்தை முன்னிட்டு முதற் சனிக்கிழமை அடியவர்கள் தங்கள் வீடுகளில் தயாரிக்கின்ற பலகாரவகைகளை கடகங்களிலே வைத்து வெள்ளைத் துணியால் கட்டி கோயிலை நோக்கித் தலையில் சுமந்து வந்து பாய் விரித்து அதன் மேல் வாழையிலையில் பொங்கலிட்டு ஆட்டுக்கடாய், கோழி போன்ற உயிரினங்களையும் பலிகொடுத்து நடைபெறுகின்ற இவ் விழாவானது இக் கிராமத்தின் அடியார்களினால் சிறப்பு விழாவாக கொண்டாடப்பட்டது. 1939ம் ஆண்டு முருகன் என்ற அன்பரால் சந்தனக் கிண்ணமும் கைமணியும் சேமக்கலையும், பஞ்சமணியும் 1947ம் ஆண்டு கதிரன் என்ற அன்பரால் தண்டவாளத் தூணுடன் தகரத்தால் ஆன கூரையிட்ட காண்டாமணியும் உபயம் செய்யப்பட்டது. 1959ம் ஆண்டு சுற்றுப் பகுதியின் ஆலய தர்மகர்த்தா வீரத்தி தம்பிஐயா, முத்தன் இராசன், பொன்னன் சுந்தரலிங்கம் ஆகியோரின் பெரும் மனதினால் தர்மபரிபாலன சபை உருவாக்கப்பட்டு இச் சபையால் இவ் ஆலயம் பொறுப்பேற்கப்பட்டது. காலையும், மாலையும் நித்தியபூசை வழிபாடுகளை வீரத்தி தம்பிஐயா அவர்கள் செய்து வந்தார். இவரின் பெரும் முயற்சியினால் ஆலயத்தில் நடைபெற்று வந்த பலியிடல், மடைபோடுதல் போன்ற முறைகைகள் மாற்றப்பட்டு ஆகம பூசைமுறையில் இருந்த களை மேற்கள் அகற்றப்பட்டு ஆலயத்திற்கென ஒரு விஸ்தீரணம் கொண்ட இடம் ஒதுக்கப்பட்டது.

1962ஆம் ஆண்டு அன்னையின் அருட்கடாட்சத்தினால் ஒன்று கூடிய மக்கள் ஆலயத்தைச் சிறப்பான திருப்பெரும் கோயிலாக அமைப்பதற்கு பாலஸ்தாபனம் செய்தனர். முன்னாள் யாழ் மாவட்ட நீதிபதி தேசபாலசிங்கம் அவர்களும், யாழ் பொலிஸ் சுப்பிரின்டன் திரு.வான்சன்டன் அவர்களும் வடமாகாண அரசாங்க அதிபர் திரு. ஜவன் சமர வீக்கிரம அவர்களும் அஸ்திவாரக் கல் நாட்டு விழாவை முன்னின்று செய்தனர். தொடர்ந்து அடியவர்களினால் இக் கோயில் ஈசான மூலையில் சிரமதானப் பணியில் தீர்த்தக் கிணறு அமைக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து ஆலயத்தில் சிறந்த திருப்பணி வேலைகள் வெகு சிறப்பாகவும் மும்முரமாகவும் நடைபெற்றது. 1965ஆம் ஆண்டு ஆனி மாதம் 17ஆம் திகதி வியாழக்கிழமை உத்தரட்டாதி நட்சத்திரத்தில் காலை 07.30 மணிக்கு கன்னிலக்கின சுபமுகூர்த்த சுபவேளையில் அம்பாளிற்கு பிரம்மஸ்ரீ குமாரசாமி குருக்கள் அவர்களால் பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் நடைபெற்றது. அன்றிலிருந்து பேசிய அம்மன் என்னும் திருநாமத்துடன் அடியவர்களுக்கு அருள்புரிந்த அன்னை பராசக்தி பிரம்மஸ்ரீ குமாரசாமிக் குருக்கள் மற்றும் சிற்பாச்சாரியார் ராமலிங்கம் ஆச்சாரியார் அவர்களின் ஆலோசனைகளின் படி அன்னைக்கு 'சிவகாமி அம்பாள்' எனும் திருநாமம் சூட்டப்பட்டது.

1966ஆம் ஆண்டு அம்பாளிற்கு வைகாசி விசாகத்தை முன்னிட்டு 10 தினங்கள் அலங்கார உற்சவம் நடைபெற திருவருள் பாலித்தது. அலங்கார உற்சவத்தின் பத்தாவது நாள் பெருவீதியான அரசடிவீதி ஊடாக குமாரகோட்ட வீதியால் அம்பாள் வீதி உலா வருவது வழக்கம்.

09.07.1971ஆம் ஆண்டு உத்தரட்டாதி நட்சத்திரத்தில் தேர்த்திருப்பணி அங்குரார்ப்பண நிகழ்வு நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து ரிஷபம், பலிபீடம், கொடித்தம்பம், வசந்த மண்டபம், மணிக்கோபுரம், வைரவர், திருமஞ்சனக்கிணறு முதலான திருப்பணி வேலைகள் நிறைவேற்றப்பட்டு 1976ஆம் ஆண்டு (நளவருடம் வைகாசித் திங்கள்) 6ஆம்நாள் 3ஆம் திகதி வியாழக்கிழமை வசந்த மஹோற்சவ பெருவிழா ஆரம்பமானது. தேர் வெள்ளோட்டமும் இடம்பெற்றது. (09.06.1976 புதன்கிழமை பிப 4.30 மணியளவில்) மஹோற்சவ காலத்தில் வேட்டைத்திருவிழாவன்று மாலை வேளையில் குதிரைவாகனத்தில் அம்பாள் ஞானவைரவர் சுவாமி கோவிலுக்குச் சென்று வேட்டையாடுவதும் இரவு சப்பறத்திருவிழாவும் மறுநாள் தேர்த்திருவிழாவும் வைகாசிப் பௌர்ணமியில் தீர்த்த உற்சவமும் நடைபெறுவது வழக்கம்.

1977இல் அம்பாள் திருவூஞ்சல் காப்பு சுட்டிபுரத்தில் இசைமணி சீர்காழி கோவிந்தராஜன் அவர்களால் பாடப்பட்டு சிறப்பு உடையது.

திருக்கோயில் வாயிலில் தல விருட்சமாக காணப்படும் ஆலும், அரசும் ஒன்றிணைந்த அருள்மிகு மரத்தின் ஊடாக அம்பாளின் விமானத்தில் கலசத்தைக் காணக்கூடியதாக உள்ளது. இது அற்புதமான ஒன்றாகும்.

அம்பாளின் மூர்த்தி கரம் மேலும் பிரவாகிக்க 1982இல் மீண்டும் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு உலக இந்து மகாசபை (விஸ்வ இந்து பரிஷத்) இலங்கை கிளை பிரதித் தலைவராக இருந்த திரு. யோகேந்திரா துரைச்சாமி அவர்களால் அழைத்து வரப்பட்ட வட இந்திய துறவிகள் சேர்ந்து தைப்பூச தினத்தன்று அடிக்கல் நாட்டப்பட்டு திருப்பணி வேலைகள் தொடங்கப்பட்டன. இந்தியாவிலிருந்து வருவிக்கப்பட்ட சிறந்த சிற்பாசிரியர்களால் முறைப்படி கலை அம்சம் பொருந்திய தூபிகள் பிறை மேகாபுரம் அமைக்கப்பட்டது. ஈழத்தாயான சிவகாமி அம்பாள் திருவுருவை நிர்மாணித்த தென்னிந்திய சிற்ப வல்லுனர் ஆச்சாரியாருக்கு அம்பாளின் விக்கிரக வேலையே கடைசி வேலையாக அமைந்தது. இந்நேரம் அவர் இறைவனடி சேர்ந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

மூலமூர்த்தியான சிவகாமி அம்பாள் வள்ளி தெய்வானை சமேத ஸ்ரீ முருகப்பெருமான், ஸ்ரீ வயிரவர் பெருமான் என்பன இந்தியாவிலிருந்து 02.10.87 விஜயதசமி அன்று இங்கு வந்து சேர்ந்தன. விநாயகப் பெருமான், வள்ளி தெய்வானை ஸ்ரீ முருகப்பெருமான், நாகதம்பிரான், சந்தான கோபாலர், நர்த்தன கணபதி, மகேஸ்வரி, வைஷ்ணவி, பிராமி, துர்க்கை, சண்டேஸ்வரி ஆகிய பரிவார மூர்த்திகளுக்கு ஆகம முறைப்படி தனித்தனி கோயில்களும், சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ நடராஜப் பெருமானிற்கு கனகசபையும் அமைக்கப்பட்டதுடன் மூலமூர்த்தியான சிவகாமி அம்பாளின் விக்கிரகமும் புதிதாக பிரதிஷ்டை செய்யப்பட்டு பரிபாலனசபை தலைவர் அ.சோமசுந்தரம், செயலாளர் த.தேவராசா, பொருளாளர் பொ.சிவானந்தம் ஆகியோரின் தலைமையில் 1989ஆம் ஆண்டு சிவஸ்ரீ கு.குகதாஸக்குருக்கள் அவர்களினால் பங்குனி உத்தர பௌர்ணமி நிறைநாளில் மஹாகும்பாபிஷேகத்தை நடாத்தி வைத்தார்.

காஞ்சிப் பெரியாரின் அருள் ஆசியுடனும் ஈழத்து அருளாளர்களின் நல்லாசியுடனும் இந்தியாவில் புதிய கலச தீர்த்தம் இம் மஹாகும்பாபிஷேகத்திற்குப் பயன்படுத்தப்பட்டது ஒரு சிறப்பாகும். இந்த நன்னாளில் அம்பாளின் திருக்கோயில் சுற்றாடலிற்கு தென்னிந்தியாவைச் சேர்ந்த பெரியசாமி ஆச்சாரியின் நல்லாசிகளுடன் தில்லையம்பதி எனும் திருநாமம் சூட்டப்பட்டது.

தினமும் காலை, மதியம், மாலை பூஜை, வழிபாடு நடைபெறவும் அம்பாளின் அருட்கடாட்சம் கிட்டியது. 1990ஆம் ஆண்டு திருக்கோயில் வருடாந்த சங்காபிஷேக தினத்தன்று காசியில் இருந்து காசி விஸ்வநாதர் (லிங்கம்) இங்கு வரவழைக்கப்பட்டது.

1992 பங்குனி உத்திரத்தை முன்னிட்டு பத்துத் தினங்கள் இலட்ச அர்ச்சனை ஆரம்பமாகியது. பங்குனி உத்தர சங்காபிஷேகம், மஹோற்சவ வேட்டைத் திருவிழா, நவராத்திரி, விஜயதசமி, மானம்பூ ஆகிய தினங்களில் அம்பாள் பழைய தெரு வீதியூடாக தீர்த்தம் தருவது வழக்கமாகும். 1993ஆம் ஆண்டு தை மாதம் காசி விசாலாட்சி சமேத விஸ்வநாதருக்கு பிரதிஷ்டா கும்பாபிஷேகம் நடைபெற்றது. 1994ஆம் ஆண்டு நடைபெற்ற பங்குனி உத்தர சங்காபிஷேகத்தின் போது அம்பாளின் அருட்கடாட்சத்தினாலும் அடியார்களின் பெரும் காணிக்கைகளினாலும் அம்பாளுக்கு பொன்முடியும் திருக்காப்பும் சூட்டுவிழாவும் கொண்டாடப்பட்டது.

கவிமாமணி நவீரமணி ஐயா அவர்களால் எழுதப்பட்டு தென்னிந்திய பக்திப்பாடகர் கலைமாமணி வீரமணி சோமசுந்தர்ராஜன் அவர்களால் பாடப்பட்ட திருவூஞ்சல் ஒலிப்பதிவு நாடா வெளியீட்டு விழா மா.இலக்கணகுமார் தலைமையில் 20.05.1994 வைகாசி வசந்த உற்சவத்தன்று ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் ஆசியுடன் வெளியிடப்பட்டது. 10.06.1997ல் மா.இலக்கணகுமார் தலைமையில் இரண்டாவது பக்திப் பாமாலை ஒலிப்பதிவு நாடாவும் வெளியிடப்பட்டது.

இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட ஸ்ரீ சக்கரம் 10.09.1998 பங்குனி உத்தர தினத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டது. 08.05.2000ஆம் ஆண்டு 25வது கொடியேற்றத்தை முன்னிட்டு அடியார்களின் பெரும் காணிக்கையினால் அம்பாளுக்கு தங்கக்கவச சூட்டுவிழாவும் இராஜகோபுர அமைப்பதற்கான அங்குரார்ப்பண வைபவமும் நடைபெற்றன.

200ம் ஆண்டில் அம்பாளுக்கு சுற்றுப்புற மண்டப வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு 2002ம் ஆண்டு நிறைவு பெற்றது. 25.05.2002 பிரம்மஸ்ரீ நவீரமணிக்குருக்கள் அவர்களால் இயற்றப்பட்டு கலைமாமணி டாக்டர் சீர்காழி சிவசிதம்பரம் மற்றும் வு.கூ.செல்வகுமார் ஆகியோரால் பாடப்பெற்ற ஒலிநாடா வெளியிடப்பட்டது.

மீண்டும் 19.06.2003 இல் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு திருப்பணி வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. விநாயகர், வள்ளி, தெய்வானை சமேத முருகன், விஸ்வநாத விசாலாட்சி புனருத்தாரணம் செய்யப்பட்டதோடு நவக்கிரகமும் புதிதாக அமைக்கப் பெற்று அம்பாளுக்கு செங்கல் தடாகமும் அமைக்கப் பெற்றது. அத்துடன் வசந்த மண்டப தெற்குவாயில் திறக்கப் பெற்று இந்தியாவின் கும்பகோணத்திலிருந்து தருவிக்கப்பட்ட நடராஜப் பெருமான், மாணிக்கவாசகர் பிரதிஷ்டை செய்யப்பட்டதுடன் தமிழகத்தின் கும்பகோண நவகன்னிகை எனப் போற்றப்படும் மகா மாசிமக தீர்த்தங்கள் கொண்டு சுபானு வருடம் பங்குனி மாதம் 22ம் நாள் (04.04.2004) ஞாயிற்றுக்கிழமை பங்குனி உத்தர நன்னாளில் சதா மகாலிங்க குருக்கள் அவர்கள் மஹாகும்பாபிஷேகத்தை நடாத்தி வைத்தார். அருட்கவி செம்மல் பிரம்மஸ்ரீ நவீரமணி ஐயர், இரா.இராஜேஸ்வரன் ஆகியோரால் இயற்றப்பட்டு தென்னிந்திய பாடகர்களான வு.கூ.செல்வகுமார், கலைமாமணி டாக்டர் சீர்காழி பு.சிவசிதம்பரம் ஆகியோரால் பாடப்பெற்ற தில்லையம்பதியாள் கும்பாபிஷேக கீர்த்தனை இறுவட்டு திரு. சுப்பையா முத்துலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

13.07.2005 ஆம் ஆண்டு புதன்கிழமை ஆனி உத்தர தினத்தன்று பஞ்ச தள இராஜகோபுரத்திற்கான அடிக்கல்லை போசகர் காந்தி பொன்னையா அவர்கள் நாட்டி வைத்தார்.

பஞ்சதளங்களை உள்ளடக்கிய இராஜகோபுர திருப்பணி வேலைகள் தென்னிந்திய சிற்பவல்லுனர்கள் தமிழகத்தின் மாமல்லபுரம் ஸ்தபதி ஞானமுருகன் குழுவினரும், சீர்காழி ஸ்தபதி புருஷோத்தமன் குழுவினரால் கட்டுமானப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. கோபுரத்தின் எழில்மிகு தோற்றத்திற்கு தமிழகத்தில் வரவழைக்கப்பட்ட மதுரையில் இருந்து கலசமும் தஞ்சாவூரில் இருந்து காண்டாமணியும் மாமல்லபுரத்தில் இருந்து துவாரபாலகர்களும் கொண்டு வரப்பட்டது. இத் திருப்பணி வேலைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டதோடு வெளிநாடுகளில் இருக்கும் அன்னையின் அடியவர்களாலும் எங்கள் கிராமத்து அடியவர்களின் பெரும் நிதியினாலும் அவர்களின் உழைப்பினாலும் நிர்மாணிக்கப்பட்ட இராஜகோபுர திருப்பணிகள் யாவும் பூர்த்தியடைந்த நிலையில் மஹாகும்பாபிஷேகம் 18.03.2010 இல் இராஜகோபுர திருப்பணி சபைத் தலைவர் திரு. மா. குணசிங்கம் தலைமையில் இராஜகோபுர கும்பாபிஷேகம் சிவஸ்ரீ சந்திரசேகரக் குருக்கள் அவர்களினால் நடாத்தி வைக்கப்பட்டுள்ளது. அத்துடன் மஹாவித்துவான் நவீரமணிஐயர், இரா.இராஜேஸ்வரன், சி.சுகிர்னலிங்கம், கு.த.தயாபரன் ஆகியோரால் பாடப்பெற்ற 'கோபுர தரிசனம்' எனும் கீர்த்தனைகள் பாடல் இறுவட்டு வெளியிடப்பட்டது. அத்துடன் இவ்வருட மஹோற்சவம் 12 தினங்களாக நடைபெற அம்பிகையின் திருவருள் கைகூடியுள்ளது.

'திருப்பணிச் செல்வர்' முத்தன் ராசன் குடும்பத்தினரால் தில்லையம்பதி ஸ்ரீசிவகாமி அம்பாள் திருமண மண்டபத்துக்கு 16.07.2011 ஆம் ஆண்டு பேரன் சக்திபிரியன் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டது. இதனைத் தொடர்ந்து புதிதாகக் கொண்டு வரப்பட்ட ஸ்ரீ சக்ர யந்திரம் 18.03.2012 ஆண்டு பங்குனி திருவாதிரை நட்சத்திரத்தில் பிரம்மஸ்ரீ நா.தியாகராசக்குருக்கள் தலைமையில் பிரதிஷ்டை கும்பாபிஷேகம் செய்யப்பட்டது.

12.04.2013 இல் பொதுச்சபையின் தீர்மானத்திற்கு அமைய நவகோண வடிவிலான புதிய சித்திரத்தேர் அமைப்பதற்கு தேர் திருப்பணி சபை தெரிவு செய்யப்பட்டது. திருமண மண்டப திருப்பணி வேலைகள் பூர்த்தியடைந்த நிலையில் 29.04.2013 இல் திருக்கோயில் பரிபாலன சபைத் தலைவர் திரு.ராஜா அவர்களின் தலைமையில் திரு. பிரபாகரன் ஜெகதீஸ்வரி தம்பதிகள், பிள்ளைகள் சக்திப்பிரியன், விஷ்ணுகரன் ஆகியோரால் ஸ்ரீ சிவகாமி அம்பாள் திருக்கோயில் திருமண மண்டபம் மங்களகரமாக திறந்து வைக்கப்பட்டது.

2013ம் ஆண்டு முப்பத்து எட்டாவது மஹோற்சவ பெருவிழாவின் போது அட்சய திதி கூடிய சுப நன்நாளில் மூலமூர்த்தியான ஸ்ரீ சிவகாமி அம்பாளுக்கு பொன்முடி சூட்டப்பட்டது. 19.05.2013 இல் புதிய திருச் சகடை வாகன வெள்ளோட்டவிழா 7ம் திருவிழா தினத்தன்று இரவு நடைபெற்று அத்தினத்திலேயே சகடை வாகனத்தில் அம்பாள் வலம் வரும் காட்சி இடம்பெற்றது.

2014ம் ஆண்டு பங்குனி உத்தர தினத்தன்று நவகோண சித்திரத் தேருக்கான அச்சு வைத்தல் நிகழ்வு இடம்பெற்றது.


02.02.2015 தைப்பூச தினத்தன்று நவகோண புதிய சித்திரத் தேருக்கான அச்சு வைத்தல் நிகழ்வு இடம்பெற்றது. 16.09.2015ம் ஆண்டு பாலஸ்தாபனம் செய்யப்பட்டு திருப்பணி வேலைகள் நடைபெற்று தலைவர் திரு. சி. ஆனந்தராசா தலைமையில் (மஹா வருஷம் பங்குனி உத்தர நன்நாளில் பிரம்மஸ்ரீ ந.தியாகராஜக்குருக்கள் அவர்களினால் கும்பாபிஷேகம் நடாத்தி வைக்கப்பட்டது.

2016 வைகாசி மஹோற்சவ தீர்த்த உற்சவ தினத்தன்று புதிய நவகோண சித்திரத் தேருக்கான பவனிகள் நாட்டும் வைபவம் இடம்பெற்றது. தேர்த் திருப்பணி வேலைகள் மும்முரமாக நிறைவுற்று ஏவிளம்பி வருடம் 05.06.2017ம் ஆண்டு மஹோற்சவத்தின் 8ம் நாளன்று மாலை தேர் திருப்பணி சபைத் தலைவர் திரு. க. கிருபாகரன் தலைமையில் வெள்ளோட்ட விழா நடைபெற்று தமிழ் நாட்டிலிருந்து வருகைதந்த பூஜண்ட நாகநாத சித்தர் சுவாமிகள் (அதிஷ்டானம்) அவர்கள் கலந்து கொண்டு ஆசியுரை வழங்கி சிறப்பித்தார்.

(42வது ஆண்டு மஹோற்சவம்) 2017 வசந்த வைகாசி மஹோற்சவத்தின் 11ம் நாள் (08.06.2017) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு புதிய நவகோண சித்திரத் தேரில் ஆரோகணித்து பவனி வரும் அருட்திருக் காட்சியைக் கண்குளிரப் பார்ப்போம்.

'தில்லையம்பதியாளே சிவகாம சுந்தரியே சரணம்'







### ஆலய பிரதம குருவின் ஆசிச் செய்தி



[illegible]

சுபம்

பிரம்மஸ்ரீ நா.தியாகராசக்குருக்கள், தில்லையம்பதி

அனுசரணை

THILLAIYAMPATHYS MOTORS

Dealers in : Agriculture & Electirc Water Pumps, KEN Power Tools, Engineering Tools, Generators, machines & Spare Parts

#100, Stanley Road, jaffna | Phone : 021 222 5710 | Fax : 021 222 4542 | Mobile : 0777 666 371 | E.mail : tmotorsin@yahoo.com



# 25 கோடி

## சுசந்திகாவின் வெள்ளிப்பதக்கம்

பொருளாதார ரீதியாக தான் மிக நெருக்கடியான நிலையில் இருப்பதால் ஒலிம்பிக் போட்டியில் பெற்ற வெள்ளிப் பதக்கத்தை விற்பனை செய்யப் போவதாக இலங்கையின் முன்னாள் குறுந்தூர ஓட்ட வீராங்கனை சுசந்திகா அறிவித்திருந்தார். அவரின் அறிவிப்பைத் தொடர்ந்து உலகெங்கிலும் இருந்து அந்தப் பதக்கத்தை வாங்குவதற்கு பலர் போட்டி போடுவதாக சுசந்திகா தெரிவித்துள்ளார். “சுமார் 25 கோடி ரூபா கொடுத்தேனும் அந்தப் பதக்கத்தை வாங்க பலர் விண்ணப்பித்துள்ளனர். என் பதக்கத்தின் பெறுமதி எனக்கே இப்போதுதான் தெரிகிறது” என சுசந்திகா கூறியுள்ளார். பதக்கத்தை விற்கும் சுசந்திகாவின் முடிவை விளையாட்டுத் துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகர கடுமையாகச் சாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஆ)

# அபாயம் 30 வீடுகள்

எந்நேரமும் இடிந்து விழக்கூடிய அபாய நிலையில் மாத்தளையில் உள்ள 30 வீடுகள் இருப்பதாக பிரதேசவாசிகள் தெரிவித்துள்ளனர். மாத்தளை பரணகம பகுதியிலுள்ள இந்த 30 வீடுகளின் தரைகளிலும் சுவர்களிலும் திடீரென பெரும் வெடிப்புகள் ஏற்பட்டுள்ளன. இதனால் அந்த வீடுகள் எந்நேரமும் இடிந்து விழக்கூடிய அபாயம் காணப்படுகின்றது. வீடுகள் இடிந்து விழுமோ என்ற அச்சத்தில் அந்த வீடுகளில் இருந்தவர்கள் இடம்பெயர்ந்து வருகின்றனர். (ஆ)

# இன்றைய கருத்தோவியம்




# பிரார்த்தனையில் பிரசாரம் பிசுபிசுத்த மகிந்த திட்டம்



அனர்த்தத்தில் உயிரிழந்தோருக்கு பிரார்த்தனை செய்யும் நிகழ்வை தனக்கான பிரசார நிகழ்வாக மாற்ற மகிந்த ராஜபக்ச எடுத்த முயற்சி முறியடிக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி செயலகத்தின் ஏற்பாட்டில் சுதந்திர சதுக்கத்தில் கடந்த 6 ஆம் திகதி அனர்த்தங்களில் உயிரிழந்த மக்களுக்கான பிரார்த்தனை நிகழ்வு நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டவர்களுக்கு மகிந்த ராஜபக்சவின் உருவப்படம் பொறித்த அப்பியாசக்கொப்பிகளை வழங்க திட்டம் தீட்டப்பட்டு அந்தக் கொப்பிகளோடு சிலர் நிகழ்வு நடைபெறும் இடத்துக்குள் ஊடுருவியிருந்தார்கள். ஆயினும் விசேட அதிரடிப்படையினர் இந்த பிரசார நடவடிக்கைக்காக கொண்டுவரப்பட்ட கொப்பிகளைக் கண்டுபிடித்தனர். கொப்பிகளையும் அதனைக் கொண்டுவந்தவர்களையும் பிரார்த்தனை நிகழ்வில் இருந்து வெளியேற்றியதால் மகிந்தவின் திட்டம் பிசுபிசுத்துப் போனதாகக் கூறப்படுகின்றது.(ஆ)

# வலி.வடக்கில் வீதிகள் புனரமைப்பு ஆரம்பம்

வலி.வடக்கில் அண்மையில் விடுவிக்கப்பட்ட வசாவிளான் தொடக்கம் மாவட்டபுரம் வரையான ஈழகேசரி பொன்னையா வீதியைப் புனரமைக்கும் பணிகள் நேற்று ஆரம்பமாகின.

வடமாகாண மீன்பிடி, போக்குவரத்து, கிராம அபிவிருத்தி, வீதி அபிவிருத்தி, வர்த்தக வாணிபம் மற்றும் மோட்டார் போக்குவரத்து அமைச்சர் பா.டெனிஸ்வரனும், வடமாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபனும் இணைந்து இந்தப் பணிகளை குரும்பசிட்டியில் ஆரம்பித்து வைத்தனர். அதன்போது அமைச்சின் செயலாளர் எஸ். சத்தியசீலன், வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் மாகாண பணிப்பாளர் சிவராஜலிங்கம், பிரதம பொறியியலாளர்களான ஜெகானந்தன், அபிராமி மற்றும் வடமாகாண தனியார் பேருந்து உரிமையாளர் சங்க ஒன்றிய தலைவர் சிவபரன் ஆகியோரும் பிரசன்னமாகியிருந்தனர். (அ)





## நெல்லியடி முருகனுக்குத் தேர்



நெல்லியடி தடங்கன்புளியடி முருகமூர்த்தி ஆலயத்தின் தேர்த்திருவிழா இன்று காலை 10மணியளவில் நடைபெற்றது. இதில் பெருந்திரளான பக்தர்கள் கலந்து கொண்டார்கள். (எ-11)

# “எனக்குத் தெரியாது”

## முன்னாள் இராணுவத்தளபதி சாட்சியம்

காங்கேசன் சிமெந்துத் தொழிற்சாலையில் உள்ள இயந்திர இரும்புகளை எவருக்கும் விற்பனை செய்யக் கூடாது என்று நான் படையினருக்கு போட்டிருந்த உத்தரவினையும் மீறியே அது விற்கப்பட்டுள்ளது” முன்னாள் இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் தயா ரட்நாயக்க தெரிவித்துள்ளார்.பெரும் நிதி மோசடிகள் மற்றும் அதிகார துஷ்பிரயோகம் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் எதிரில் முன்னிலையாகி நேற்று சாட்சியமளித்த போது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.



ஒரு இராணுவத் தளபதியின் உத்தரவை மீறி படையினர் துணிச்சலாக காங்கேசன் தொழிற்சாலை இரும்புகளை விற்பனை செய்திருந்தால் அது அரச உயர்மட்டத்தின் கட்டளைப் படியே நடந்திருக்கும் என ஊகிக்கப்படுகிறது. இந்த நிலையில் குறித்த சம்பவம் தொடர்பாக முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாயவும் விரைவில் விசாரணைக்கு உட்படுத்தப்படவுள்ளார். (இ)

## நாளை நாளும் கோளும்

09.06.2017 வெள்ளிக்கிழமை ஏவிளம்பி வருடம் வைகாசி மாதம் 26ஆம் நாள்

பூரணை மு.இ. 07.04 வரை | கேட்டை பி.இ. 05.39 வரை | மரணயோகம்

இராகுகாலம் 10.22-11.52 | சுபநேரம் 05.52-07.22 | எமகண்டம் 02.52-04.22

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| சிரமம் | சிந்தனை | குழப்பம் | நம்பிக்கை | உதவி | சுகம் | சாதனை | சோர்வு | அனுகூலம் | ஆர்வம் | அலைச்சல் | விவேகம் |

எதிரொலி
Ethiroli

# நடுத்தெருவில் நிற்க காரணம் இதுதான்!



"கடந்த 2012 இல் இருந்து பல உண்மைகளை அம்பலப்படுத்தி அனைத்து தமிழ் மக்களும் ஒரு தெளிவான பாதையில் பயணிக்கும் வகையில் செயற்பட்டு வந்தவர்களில் திருமுருகன் காந்தியும் மே 17 இயக்கத்தினரும் முக்கியமானவர்கள்.

ஆனால் இவர்களின் கருத்துக்களை தமிழர்கள் கணக்கெடுக்காமையாலேயே இன்று நாங்கள் நடுத்தெருவில் நிற்கிறோம்" என்றுகூறியுள்ளார் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.

திருமுருகன்காந்தி உள்ளிட்டவர்களை விடுவிக்கக் கோரி இன்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.(அ)

# கல்கிஸையில் போதைப்பொருள்

கல்கிஸை பிரதேசத்தில் 60 இலட்சம் ரூபா பெறுமதியான போதைப் பொருளை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவல் ஒன்றின் பிரகாரம் இன்று காலை முதல் அப்பகுதியில் விசேட சோதனை நடவடிக்கைகளும், இரகசிய கண்காணிப்பு நடவடிக்கைகளும் முடுக்கி விடப்பட்டி ருந்தன. இதன்போதே மோட்டார் சைக்கிளில் சென்ற ஒருவரிடமிருந்து பெருமளவான போதைப் பொருட்கள் கைப்பற்றப்பட்டன. சந்தேகநபரும் கைது செய்யப்பட்டார்(ஆ)

# அந்த நாள் ஞாபகம்.....!



## 619.06.08

யாழ்ப்பாண இராச்சியம் மீது போர்த்துக்கேயர்கள் போர்ப்பிரகடனம் செய்து 1619 ஜூன் 5 ஆம் திகதி தாக்குதல் தொடுத்தனர். ஜூன் 8 ஆம் திகதி இரண்டாம் சங்கிலியன் யாழ்ப்பாண இராச்சியத்தை விட்டு பின்வாங்கினான்.

# சிங்கள பாடகர் சாவு

பிரபல சிங்கள பாடகர் பிரின்ஸ் உதய பிரியந்த (வயது-47) இன்று நண்பகல் காலமானார்.

நீண்ட நாள்களாகக் கொழும்பிலுள்ள தனியார் வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையி லேயே அவர் இன்று உயிரிழந்துள்ளார்.(இ)

# பூசகரின் சடலம் மீட்பு

மட்டக்களப்பு ஒந்தாச்சிமடம் பகுதியில் பூசகர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

மீட்கப்பட்ட சடலம் மகிழூர் பகுதியைச் சேர்ந்த பூசகரான க. வீரக்குட்டி (61வயது) என்பவருடையது என அடையாளம் காணப்பட்டுள்ளது.

குறித்த பூசகர் தனிமையில் வாழ்ந்து வந்தவரெனவும், சுகயீனம் காரணமாக இறந்திருக்கலாம் எனவும் கூறப்படுகின்றது. சடலம் இன்று காலை பிரேத பரிசோதனை களுக்காக மட்டக்களப்பு போதனா வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதாகப் பொலிஸார் கூறியுள்ளனர்.(அ)



கோண்டாவில் வடக்கு ஈழத்துத் தில்லையம்பதி ஆலயத்தின் தேர்த்திருவிழா இன்று நடைபெற்றது.

## இன்று .... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பகுதியில் மோட்டார் சைக்கிள் ஒன்று லொறியுடன் மோதி விபத்துக்குள்ளானது. இதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த நபர் பலியாகியுள்ளார்.

4. அனுராதபுரம் - ஷாவஸ்திபுர மயானத்துக்கு அருகில் இடம்பெற்ற விபத்தில் 30 வயதான பெண் ஒருவர் உயிரிழந்துள்ள தோடு, சிறு குழந்தை யொன்றும் காயமடைந் துள்ளது.

5.கஹவத்தை - வெல்லதுர பகுதியில் ஒட்டோ ஒன்று வீதியின் அருகில் இருந்த பெண் ஒருவர் மீது மோதியுள்ளது. இதன்போது படுகாய மடைந்த பெண் வைத்திய சாலையில் உயிரிழந்தார்.

6.தெஹிவளை மற்றும் பேலியகொடை பகுதியில் ரயிலுடன் மோதிய இருவர் மரணமடைந்துள்ளனர்.(அ)

## ஐ.நா..... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மீறல்கள் மற்றும் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்ட தரப்புக்களுக்கு எதிராகவே தீர்மானம் நிறைவேற்றப் பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ள அவர் குற்றச் செயல்களுக்கு பொறுப்பு கூறப்படாத நிலைமை தொடர்ந்தும் நீடிக்க அனுமதிக்க முடியாது எனவும் சுட்டிக் காட்டியுள்ளார். (எ)

# குடிசை தீயில் நாசம்

ஏறாவூர், தாமரைக்கேணி கிராமத்தில் வயோதிபத் தம்பதியினர் வசித்து வந்த குடிசை மின்னொழுக்கினால் எரிந்து சாம்பரமாகியுள்ளது. இச்சம்பவம், நேற்று நண்பகல் இடம்பெற் றுள்ளது.

இதன்போது, குடிசையில் இருந்து அத்தனை உடமைகளும் முற்றாக எரிந்து சேதமாகியுள்ளது. எனினும் குறித்த வயோதிப தம்பதியினர் இருவரும் குடிசையை விட்டு வெளியேறியிருந்த சமயத்திலேயே தீப்பற்றிக் கொண்டதால், அதிர்ஷ்ட வசமாக எவருக்கும் உயிராபத்துக்களோ காயங்களோ ஏற்படவில்லை என்று பொலி ஸார் தெரிவித்தனர்.(ஆ)

# அடக்கினாலும் எழுவார் திருமுருகன்காந்தி



ஈழத்தில் உயிரிழந்த மக்களுக்காக மே 17 எனும் இயக்கத்தை ஆரம்பித்து ,ஒவ்வொரு வருடமும் சென்னை மெரினா கடற்கரையில் நினைவேந்தலை நடத்தியவர்களை இந்த வருடம் குண்டர் சட்டத்தின் கீழ் கைது செய்துள்ளமை கவலையைத் தருகிறது- என்று வடமாகாணசபை உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் இன்று யாழில் திருமுருகன் காந்தியை விடுவிக்கக் கோரி நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது கூறினார்.

"திருமுருகன் காந்தி ஐக்கிய நாடுகள் பேரவையில் ஈழத்தமிழர்களுக்காக எம்முடன் இணைந்து போராடிய ஒரு ஜனநாயக போராளி. இவரை அடைத்து வைத்திருப்பது கவலைக்குரியது. தமிழின உணர்வாளர்களை அடக்க அடக்க அவர்கள் மேலும் எழுவார்கள்" எனவும் அவர் குறிப்பிட்டார்.(இ)

மாதாந்தம் ஒரு இலட்சம் வரை சம்பாதிக்கலாம்

விளம்பரத் துறையில் அனுபவம் / ஆர்வம் உள்ளவரா நீங்கள்? அப்படியாயின் எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்

முழு நேரமாகவோ / பகுதி நேரமாகவோ உங்கள் வசதிக்கேற்ப பணி புரியலாம்

தொடர்புகளுக்கு : 021 300 4848

## வாசகர் கவனத்துக்கு...

உங்கள் பிரதேச ஆலய, பாடசாலை, சன சமூக நிலைய, விளையாட்டு, நிகழ்வுகளை படங்களு டன் எமக்கு அனுப்பி வைத்தால் அன்றைய தினமே "எதிரொலி"யில் பிரசுரிப்போம். தகவல்களை ethirolimedia@gmail.com என்ற மின்னஞ்சல் முகவ ரியூடாகவோ தொலைபேசி யூடாகவோ அனுப்பிவைக்க லாம்.

## இதற்குத்தான் .... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போன்ற இடங்களில் கூட்டமைப்பின் பிரசாரக் கூட்டங்களிலும் நான் பங்கேற்றவன். அந்தவகையில் வடக்கு மாகாணசபை பற்றி பேச எனக்கும் உரிமை இருக்கிறது. அமைச்சர்கள் மீது குற்றச்சாட்டு சுமத்தப்பட்டதும் அது குறித்து விசாரணைக்குழு அமைத்த முதலமைச்சர் விக்னேஸ்வரனின் செயல் முன்மாதிரியான ஒன்று" எனவும் அவர் கூறியுள்ளார். (அ)

## இலங்கையில்.... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போது வடக்கில் மீன்பிடி 20-30 ஆண்டுகள் பின்தங்கியுள்ளது. மீன்பிடித் துறைமுகம் கட்டப்படுவதால் நேரடியாகவும் ,மறைமுகமாகவும் பெருமளவு வேலைவாய்ப்பு கிடைக்கும். தெற்கில் இருந்து யாரையும் அங்கு வேலைக்கு அமர்த்தும் திட்டம் எம்மிடம் இல்லை. இந்த முயற்சியால் வடக்கில் உள்ள மக்களே பயனடைவார்கள். இந்த திட்டத்துக்காக தனியார் நிலங்களை நாம் சுவீகரித்தால், அதற்கான இழப்பீடு வழங் கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

விற்பனைப் பிரதிநிதிகள் தேவை

'எதிரொலி' மாலைத் தினசரிக்கு விற்பனைப் பிரதிநிதிகள் தேவை



| | |
|---|---|
| வேலை நேரம்: | மாலை 4 மணி முதல் மாலை 6.30 வரை (இரண்டரை மணித்தியாலங்கள்) |
| வேதனம்: | 15,000 + ஊக்கப்படி |

தொடர்புக்கு:
021 300 4848, 077 657 5907
ethirolimedia@gmail.com

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 08.06.2017 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.